**செய்தி வெளியீடு எண் :029** **நாள்: 05.01.2022**

# செய்தி வெளியீடு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் சென்னை –32 கிண்டியில் இயங்கி வரும் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில், தற்போது SSC (Graduate level) தேர்விற்கான பயிற்சி வகுப்புகள் இணையவழியாக நடைபெற்று வருகின்றன. இதைத் தொடர்ந்து TNPSC – Group I, TNPSC – Group II தேர்விற்கான ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சி வகுப்புகள் ஜனவரி 10ஆம் தேதி நேரடி மற்றும் இணையவழியாக துவங்கப்படவுள்ளன.

இப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தங்களது விவரங்களை கீழ்காணும் Google form இணைப்பில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. For TNPSC – Group –I, Group –II Registration link : https://forms.gle/2cqJjvv8JiLxXphe7
2. For SSC (Graduate level) Registration link: https://forms.gle/2EsNxbGNGXdgQxdg6

இவ்வகுப்புகள் அனைத்தும், திறமை வாய்ந்த மற்றும் போட்டித் தேர்வுகளில் ஏற்கனவே வெற்றி பெற்ற வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்பட உள்ளன. பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வுகள், மாதிரி நேர்காணல்கள் உள்ளிட்ட அனைத்தும் மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

எனவே போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை இயக்குநர் திரு.K.வீரராகவ ராவ், இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

முதன்மை செயல் அலுவலர் மற்றும் இயக்குநர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை

கிண்டி, சென்னை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**